குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**<u>எஸ்.டி.சி.எண். 419/2020</u>**

<u>வழக்கு சாட்சி எ.சா.1</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22–ம் நாள் எதிர் மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Prakash | தொழில் | |
| த/பெ | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**<u>நாள் 22.09.2025</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். வாதியை எனக்கு தெரியும். என் தாத்தா வீட்டின் பக்கத்தில் குடியிருக்கிறார். நான் வாதியிடம் ரூ.2 லட்சம் மற்றும் ரூ.1 லட்சம் சீட்டு போட்டிருந்தேன். எந்த ஆண்டில் சீட்டு போட்டிருந்தேன் என்றால் 2018, 2019ல் போட்டிருந்தேன். ஏலச்சீட்டு அனைத்தையும் 2019 மே மாதம் எடுத்துவிட்டேன். எவ்வளவு தொகை எடுத்தேன் என்றால் ரூ.3 லட்சம் என்னுடைய வங்கி கணக்கில் செலுத்தினார். இதற்கு முன்பு வாதியிடம் வரவு செலவு வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். 04.04.2019 ரூ.1 லட்சமும், 08.04.2019 ரூ.2 லட்சமும் என்னுடைய வங்கி கணக்கிலிருந்து வாதியின் வங்கி கணக்கிற்கு Transfer செய்துள்ளேன். சீட்டு எடுப்பதற்கு வாதியிடம் காசோலை கொடுத்து வைத்திருந்தேன். மேற்படி காசோலையில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்திருந்தேன். மேற்படி சீட்டு தொகைக்கு பின்னிட்டு வாதிக்கும் எனக்கும் எந்த வரவு செலவும் இல்லை. நான் Union Bank of India, குமாரபாளையம் வங்கி கிளையில் கணக்கு வைத்துள்ளேன். **என்னுடைய வங்கி கணக்கு பட்டியல் எ.த.சா.ஆ 1 ஆகும். நான் 12.12.2019ல் நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்திருந்தேன். அந்த மனுவின் சான்றிட்ட நகல் எ.த.சா.ஆ 2 ஆகும்.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

மேற்படி எ.த.சா.ஆ 2 மனுவில் வாதி 5ஆம் எதிர் மனுதாரர் என்றால் சரிதான். மேற்படி மனுவில் வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகை ரூ.6 லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எ.த.சா.ஆ 2ல் நான் ஜவுளி வியாபாரமும், பைனான்ஸ்

தொழில் செய்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எ.த.சா.ஆ 2ல் நெசவுத்தொழில், ஜவுளி வியாபாரமும் மற்றும் பைனான்ஸ் தொழிலுக்காக எதிர் மனுதாரர்களிடமிருந்து திரும்ப செலுத்தும் நல்ல எண்ணத்துடன் கடன் பெற்றேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எ.த.சா.ஆ 2ல் மொத்த கடன் தொகை ரூ.3,47,70,000/- என்று தான் உள்ளது என்றால் சரிதான். எ.த.சா.ஆ 2ல் வாதியிடம் சீட்டு போட்டதாக இவ்வழக்கு முன்விசாரணையில் கூறியது போல எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். 2018-2019 ஆண்டில் வருமான வரி செலுத்தி உள்ளேனா என்றால் செலுத்தி உள்ளேன். மேற்படி வருமான வரி கணக்கில் வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகையை பற்றி குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி வருமான வரி தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எ.த.சா.ஆ 2ல் வருமான வரி கணக்கை குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் முன்பு கூறியது போல, வாதிக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுத்துவிட்டதாக கூறி நொடிப்பு நிலை மனுவினை மாற்றம் செய்வதற்கு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையான தொகையை சொல்லி தான் நொடிப்பு நிலை மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக தவறான சங்கதிகளை குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய 313(i)(b) Questioningன் போது, வாதிக்கு காசோலை தொகை கொடுக்க வேண்டியது இல்லை என்றும், ஏற்கனவே கொடுத்துவிட்டதாகவும் நான் கூறவில்லை என்றால் சரிதான். நான் வாதிக்கு ரூ.6.50 லட்சம் கொடுக்க வேண்டியது உள்ளது என்று என் மனுவில் கூறிவிட்டு, வாதி ரூ.3 லட்சம் மட்டும் தான் வழக்கு செய்துள்ளதை மறுதலித்து வழக்கு நடத்துவது அவரை ஏமாற்றும் நோக்கத்தோடு வழக்கை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**Sd/- Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**